**போபே போத்தல பிரதேச சபை – 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போபே போத்தல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, போபே போத்தல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 18,572,604 தொகைக்கான 03 கட்டிடங்களின் பெறுமதி மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவுகளின் கீழ் ரூபா 90,000 தொகைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த டிரக்டர், டேலரின் திருத்த வேலைச் செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 71,500 தொகைக்கான நீதிமன்றத் தண்டப்பணம் குறைவாக சிட்டையிடல் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல், திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டிற்கான மிகை அந்தத் தொகையினால் குறைந்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சிட்டைகள் சமர்ப்பித்திருக்காத 08 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 11,038,324 | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2019 ஆண்டிற்குரிய கணக்கீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 812,394 தொகைக்கான முத்திரைக் கட்டண பெறுவனவுகள், பெற வேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவுகள் 23 மற்றும் 24 | பாதைகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பாதைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், 2012 ஆண்டின் பின்னர் அந்தப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| பிரிவு 182 | ஆண்டின் போது ரூபா 94,630 இற்கான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வருமானத்தை பதிவழிப்பதற்கு அமைச்சரின் அங்கீகாரம் பெற வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 69,748,149 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 59,641,915 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 18,430,000 | 20,802,543 | 12,490,892 | 76,797,174 | 16,645,550 | 17,210,825 | 7,561,642 | 68,496,636 |
| வாடகை | 4,441,500 | 3,276,096 | 4,966,449 | 3,050,814 | 5,859,800 | 3,003,000 | 3,040,897 | 4,741,167 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,260,150 | 1,050,304 | 847,514 | 812,650 | 1,370,150 | 507,160 | 512,910 | 609,860 |
| ஏனைய வருமானங்கள் | 148,458,860 | 146,525,227 | 146,618,687 | 88,790 | 121,436,050 | 120,738,066 | 120,683,211 | 182,250 |
| | ----------- | ------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| மொத்தம் | 172,590,510 | 171,654,170 | 164,923,542 | 80,749,428 | 145,311,550 | 141,459,051 | 131,798,660 | 74,029,913 |
| | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்ப நிலுவை ரூபா 74,019,913 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 80,749,428 இற்கான நிலுவையொன்று காணப்பட்டது. அது வீதவரி நிலுவை மீதி ரூபா 76,797,174 தொகையாக இருந்தது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | லபுதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தில் 38 கடையறைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தது. 28 கடையறைகளின் கடை உரிமையாளர்களுடன் கையொப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கைகளில் உடன்படிக்கை செல்லுபடியாகும் கால எல்லை காட்டப்பட்டிருக்கவில்லை. அதேபோல், சபையின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி 09 இலக்க கடையறை துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் புதிய உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் மற்றும் வாடகையாளர்கள் மாத்திரம் வியாபாரம் செய்கின்றார்கள் என. | உடன்படிக்கைகளில் செல்லுபடியாகும் காலம் அடங்கப்பட வேண்டியதுடன், உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 364,500 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 121,920,175 தொகையாக இருந்தது. | எதிர் காலத்தில் பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக பாதையின் இரு மருங்கிலும் உள்ள காடுகளை வெட்டுவதற்காக MS 24 விலை விகிதங்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 64,135 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தடுத்து வைத்தல் பணத்திலிருந்து அதனை கழித்து கொடுப்பனவு செய்யப்படும் என. | மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தக்காரருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கை திகதியின் படி 6 நிர்மாண வேலைகள் தொடர்பாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த 2022 செப்தம்பர் விலை விகிதம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த விலை விகிதத்தை பயன்படுத்தியிருக்காமையால் 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 586,472 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும், 03 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 534,016 தொகை மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அறிவுரை கிடைத்த பின்னர் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | - மேற்படி - |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இறந்துள்ள மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த 30 உத்தியோகத்தர்களிடம் 2013 ஆண்டு முதல் ரூபா 430,349 இற்கான கடன் தொகையொன்று அறவீடு செய்ய முடியாமல் காணப்பட்டது. | நீண்ட காலமாக கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டதுடன், பழைய பதிவேடுகள் அழிவடைந்திருந்தது என. | நிலுவை ஊழியர் கடன் மீதி அறவீடு செய்யப்பட வேண்டும். |